Department of Education,Sabaragamuwa Province/ Weekly School



1)பாடலை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.

எங்கள் நாட்டின் வளமாம் மண்ணில் நட்டால் நலமாம்.

கண்ணுக்கு குளிர்ச்சி தந்திடும◌ாம் காயும் கனியும் கொடுத்து விடுமாம்.

மருந்து செய்ய உதவிடும◌ாம் மக்கள் நலமும் காத்திடுமாம்.

நீரைத் தேக்கி வைத்திடுமாம் நிலத்தை உறுதியாய்ச் செய்திடும◌ாம்.

மழையும் மரத்தால் பெய்திடும◌ாம் மழை உரமாய் மாறிவிடுமாம்.

அடுப்பு எரிக்க உதவிடும◌ாம் ஆற்றின் கரையை காத்திடும◌ாம்.

நூதனம் மிக்க மரங்களெல்லாம் நூறு வருடம் வாழ்ந்திடுமாம்.

ஆதலால் வளர்ப்போம் மாந்தரே ஆளுக்கொன்றாய் மரங்களையே,!

1.காயும் கனியும் தருவன எவை?

2. குளிர்ச்சி எதற்கு கிடைக்கும்?

3. மரம் நிலத்துக்கு ஆற்றும் பணிகள் எவை?

4. பூ தனம் மிக்க மரங்கள் என்பதால் குறிப்பிடப்படுவது யாது?

5. நாம் மரங்களை பாதுகாக்க செய்ய வேண்டியது என்ன?

2). கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பத்து விடயங்களுக்கு குறையாமல் சுயவிபரம் படிவம் ஒன்று தயாரிக்க.

அமிர்தலிங்கம் யோகநாதன் என்பவர் 18. 0 7. 1995 அன்று இல- 47, பிரதான வீதி, கண்டி என்ற இடத்தில் பிறந்தார். இந்து மதத்தைச் சேர்ந்த லோகநாதனின் தற்போதைய வயது 27 ஆகும் யோக நாதனின தேசிய அடையாள அட்டை இலக்கம் 96 70 31 472v. ஆக◌ும் .பட்டதாரியான யோகநாதன் கண்டியில் உள்ள விபுலானந்த மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக தொழில் புரிகின்றார் அவரது மேலதிக தகைமை ஆங்கிலப் பயிற்சி டிப்ளோமா ஆகும்.

3. பாடசாலையில் மாணவர் சேமிப்பு கணக்கு ஒன்றை ஆரம்பிக்கும் விடயமாக வங்கி உத்தியோகத்தருக்கும பாடசாலை மாணவர் ஒருவருக்கும் இடையில் நடைபெறும் உரையாடலை எழுதுக.

உள்ளடக்கப்பட வேண்டியவை.

1. காலை வணக்கம்.

2. பங்கு உத்தியோகத்தர் கேட்கும் கேள்விக்கு நீங்கள் அளிக்கும் பதில்.

3. கணக்கு ஆரம்பிப்பது தொடர்பாக நீங்கள் கேட்கும் விடயங்கள்.

4. உத்தியோகத்தர் உமக்கு அளிக்கும் பதில்.

5. நன்றி கூறுதல்.

4) பின்வரும் மரபுத்தொடர் களுக்கு சரியான விளக்கங்களை எழுதுக.

1. தாளம் போடுதல். :

2. முதலை கண்ணீர். :

3 வாரி இறைத்தல். :

4. உச்சி குளிர்தல். :

5. கழுத்தறுத்தல். :

6. காது குத்துதல். :

7. கை நீட்டுதல் :

8. கண் திறத்தல். :

9. கை கொடுத்தல். :

10. புண்படுத்தல். :

5). வெளிநாட்டில் உள்ள உமது நண்பனுக்கு எமது நாட்டின் சிறப்பு பற்றி கூறி ஏறத்தாள 75 சொற்கள் அமையுமாறு கடிதம் ஒன்று எழுதுக.